# இலங்கை வங்கி – 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க வங்கியினதும் மற்றும் இணைக்கம்பனிகளினதும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் மற்றும் காசோட்டங்கள் என்பவற்றையும் உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டன என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**நிதியக் கணக்குகள்**

(i) வங்கியின் இளைப்பாற்றுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட விரிவான பட்டோலைகளுக்கும் சேமலாப நிதியக் கணக்குகளுக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| சேமலாப நிதியம் | நிதியக் கணக்குகளின் பிரகாரம் | பட்டோலைகளின் பிரகாரம் | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| உறுப்பினர்களின் மொத்தப் பங்களிப்பு | 2,485,120,816 | 2,475,443,452 | 9,677,364 |
| வங்கியின் மொத்தப் பங்களிப்பு | 3,730,876,050 | 3,721,336,610 | 9,539,440 |
| திரண்ட வட்டி | 12,756,581,521 | 12,797,780,647 | (41,199,126) |
| **மொத்தம்** | **18,972,578,387** | **18,994,560,709** | **(21,982,322)** |

(ii) நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதியக் கணக்குகள் என்பவற்றுடன் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்திற்கும் சேமலாப நிதியத்திற்குமான வங்கியின் பங்களிப்பிற்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| நிதியத்தின் பெயர் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கியின் பங்களிப்பு | நிதியக் கணக்குகளின் பிரகாரம் வங்கியின் பங்களிப்பு | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சேமலாப நிதியம் | 523,382,654 | 524,676,577 | (1,293,923) |
| ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் | 1,608,447,451 | 1,612,050,672 | (3,603,221) |

### 1.2.2 தொங்கல் கணக்குகள்

நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்ட தொங்கல் கணக்கிலுள்ள கடன்பட்டோர்களும் கடன்கொடுத்தோர்களுமான முறையே ரூபா 135,078,799 மற்றும் ரூபா 2,583,233,504 ஆன தொகைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

வங்கியின் கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2010.02.08 ஆந் திகதிய 45/2010 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றுநிருபம் | சுற்றுநிருப அறிவுறுத்தலின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பராமரித்தல், குறியீட்டு முறைமையை அமுல்படுத்துதல் மற்றும் வருடாந்த சொத்துக்களின் மெய்மையாய்வு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1995.09.05 ஆந் திகதிய 29/1995 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றுநிருபம் | (i) ஒரே கிளையில் 5 வருடங்களுக்கும் மேலாகக் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்க வில்லை.<br>(ii) பெரும்பாலான பதவியணியினர் சுழற்சி முறையிலன்றி தொடர்ந்தும் ஒரே கடமையினைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வங்கியின் நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் வங்கி மற்றும் தொகுதியின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த முறையே ரூபா 15,546 மில்லியன் மற்றும் ரூபா 15,851 மில்லியனான வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டின் முறையே ரூபா 10,053 மில்லியன் மற்றும் ரூபா 11,075 மில்லியனான நேராத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிட்ட போது அது நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 5,493 மில்லியன் மற்றும் ரூபா 4,776 மில்லியன் ஆன அதிகரிப்பைக் காட்டியது.

வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் மற்றும் பங்கிலாபம் வருமானம் என்பன முறையே ரூபா 1,338 மில்லியன் மற்றும் ரூபா 244 மில்லியனினால் அதிகரித்திருந்தமை என்பன இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணங்களாகும். மேலும் வங்கியினால் தொடர்புடைய கம்பனிகளின் முதலீட்டுப் பெறுமதிக்கான ஒதுக்கங்கள் முன்னைய ஆண்டின் ரூபா 815 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமை மேலும் தாக்கமளித்திருந்தது.

இருந்த போதிலும் முன்னைய கடன்பத்திர முதலீட்டில் ரூபா 3,106 மில்லியன் தேறிய இலாபம் காணப்பட்ட போதிலும் பங்குச் சந்தைகளில் காணப்பட்ட பாதகத் தன்மையின் விளைவாக கடன்பத்திர முதலீட்டிலிருந்து வங்கிக்கு ரூபா 1,271 மில்லியனான பாரியளவிலான நட்டம் ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் நிதி விளைவுகளின் பல்வேறு கட்டங்களிலான பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2011** | **2010** | **2011** | **2010** |
| | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** |
| வட்டி வருமானம் | 60,745 | 50,843 | 63,728 | 53,052 |
| வட்டிச் செலவுகள் | (36,229) | (31,200) | (37,384) | (32,014) |
| **தேறிய வட்டி வருமானம்** | **24,516** | **19,643** | **26,345** | **21,038** |
| ஏனைய வருமானம் | 10,876 | 12,047 | 10,864 | 13,254 |
| **மொத்த வருமானம்** | **35,392** | **31,690** | **37,209** | **34,292** |
| மொத்தச் செலவுகள் | (19,846) | (21,638) | (21,357) | (23,216) |
| **வரிக்கு முன் தேறிய இலாபம்** | **15,546** | **10,053** | **15,851** | **11,075** |
| வரி | (4,025) | (3,687) | (4,364) | (4,162) |
| **வரிக்குப் பின் தேறிய இலாபம்** | **11,521** | **6,365** | **11,487** | **6,913** |

(ஆ) வெளிநாட்டுக் கிளைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மாலைதீவு மற்றும் சென்னைக் கிளைகளில் பெறப்பட்ட இலாபங்கள் முறையே ரூபா 881.76 மில்லியன் மற்றும் ரூபா 287.79 மில்லியன் என்பவற்றை முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது அவை முறையே ரூபா 172.42 மில்லியன் மற்றும் ரூபா 228 மில்லியன் ஆக இருந்ததுடன் அது முறையே 411 சதவீதம் மற்றும் 26 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

(ii) மாலைதீவுக் கிளையின் செயற்பாடற்ற முற்பணங்கள் முன்னைய வருடத்தின் ரூபா 96 மில்லியன் முதல் மீளாய்வாண்டின் போது ரூபா 162.57 மில்லியன் வரை அதாவது 69 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் சென்னைக் கிளையின் செயற்பாடற்ற முற்பணங்கள் முன்னைய வருடத்தின் ரூபா 45 மில்லியன் முதல் மீளாய்வாண்டின் போது ரூபா 32.97 மில்லியன் வரை அதாவது 27 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

## 2.2 முக்கியமான விகிதங்கள்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஐந்து வருடங்களினதும் குறிப்பிடக்கூடிய முக்கியமான விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | விகிதம் | இலங்கை மத்திய வங்கி அளவுகள் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | உள்ளவாறான 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | % | % | % | % | % | % | % |
| (அ) | போதிய மூலதன விகிதம் (வரிசை 1 ) | 5.00 | 11.90 | 11.38 | 11.29 | 11.22 | 10.30 | 8.52 |
| (ஆ) | போதிய மூலதன விகிதம் (வரிசை 2) | 10.00 | 12.30 | 11.40 | 15.88 | 14.16 | 13.73 | 11.64 |
| (இ) | வருமான வளர்ச்சி | | 28.80 | 42.53 | 19.98 | 5.45 | (0.16) | 12.63 |
| (ஈ) | சொத்துக்களின் வருவாய் | | 1.19 | 1.11 | 1.13 | 0.82 | 1.60 | 2.01 |
| (உ) | திரவ விகிதம் | | 22.19 | 21.20 | 24.21 | 21.13 | 28.65 | 23.36 |

இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வங்கியினால் போதியளவான மூலதன விகிதமொன்று (வரிசை1) பேணப்பட்டிருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாகக் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 8.52 சதவீதம் வரை மேலும் குறைவடைந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது அது 17.3 சதவீதமான வீழ்ச்சியாகும். மொத்த மூலதன விகிதம் 11.64 சதவீதம் வரை குறைவடைந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது அது 15.2 சதவீதமான வீழ்ச்சியாகும்.

(ஆ) வங்கியின் வருமான வளர்ச்சி வீதமானது 12.6 சதவீதமாக குறிப்பிடக்கூடியளவில் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2008 ஆம் ஆண்டிலிருந்து வருமான வளர்ச்சி வீதத்தில் எதிர்மறை வளர்ச்சியொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் வங்கியானது அதன் சொத்துக்களின் வருவாய் விகிதத்தை 2.01 சதவீதமாக அதிகரிக்கக் கூடியதாக இருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது அதன் அதிகரிப்பு 25.6 சதவீதமாக இருந்தது.

(ஈ) வங்கியின் திரவ விகிதம் 23.36 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது அதன் வீழ்ச்சி 18.5 சதவீதமாக இருந்தது.

## 2.3 கடன் நிருவாகம்

தெரிவுக் கணக்காய்வின் போது அடகுக்கு வைக்கப்படும் பிணைகள் தொடர்பாக கடன் பெறும் வாடிக்கையாளர்களிடம் காணப்படும் பிணைகளின் பெறுமதிகள் மற்றும் கடனிறுக்கும் தகைமை முறையாக மதிப்பாய்வு செய்யப்படாமல் சில கடன்களும் முற்பணங்களும் வழங்கப்பட்டிருந்தன. வாடிக்கையாளர்களிடமிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் கம்பனியை உருவாக்குவதற்குரிய சட்டரீதியான ஆவணங்கள் நேரகாலத்தில் பெறப்பட்டிருக்கவில்லை. முற்பணங்கள் தொடர்பான கடிதக் கோவைகள் பொருத்தமான ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் காப்புறுதி பூட்கைகள் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக பெறப்பட்டிருக்கவில்லை / முறையான பிரகாரம் புதுபிக்கப்பட்டிருக்கவில்லை. ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களில் முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் தீர்த்தல் கடிதங்கள் உரிய கடன்பெறுனர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) சிப்பிங் ஏஜன்ட் கம்பனி**

2008 ஆம் ஆண்டின் போது இக்கம்பனிக்கு வெளிநாட்டு வங்கிப் பிரிவினால் இணைக் கம்பனிகளின் கூட்டிணைந்த உத்தரவாதம் மற்றும் கப்பலை அடகு வைப்பதின் கீழ் கப்பலைக் கொள்வனவு செய்வதற்காக யூஎஸ்.டொலர் 1.6 மில்லியன் தொகையான கடன் வசதி இக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூலதன நிலுவை யூஎஸ்.டொலர் 1.1 மில்லியனாக இருந்தது.

எனினும் 2009 இல் இக்கம்பனி விற்பனை செய்யப்பட்டதிலிருந்து முன்னைய இணைக்கம்பனிகளின் கூட்டு உத்தரவாதம் இரத்துச் செய்யப்பட்டமையினால் தற்போது இவ்வசதிகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியாமல் போனதுடன் புதிய இணைக்கம்பனிகளிடமிருந்து கூட்டு உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வெற்றியளித்திருக்கவில்லை. அவ்வாறே அக்கப்பல் வர்த்தக ரீதியில் காணப்படாததுடன் பெறுமதி ‘‘எதுவுமில்லை’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் நிலுவைகளை அறவிடுவதற்கு அக்கம்பனிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

**(ஆ) சிப்போர்ட் உற்பத்திக் கம்பனி**

ஈ-நண்பர்கள் உத்தேசத்தியத்தின் கீழ் ரூபா 50 மில்லியன் தொகையான கடன் வசதித் தொகுதியொன்று இக்கம்பனிக்கு வழங்கப்பட்டு, மரத்துாளை உபயோகித்து சில்போர்ட் உற்பத்தி செய்வதற்கான இயந்திர உபகரணங்களை ஈடாக வைத்து 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 1.9 மில்லியன் தவணைக் கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த மூலதன நிலுவைத் தொகை ரூபா 51.8 மில்லியனாக இருந்தது.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் இக்கடன் வசதிகள் நிலுவையாகக் காணப்பட்டதுடன் தொழிற்படு மூலதனம் இன்மையின் காரணமாக இந்த கைத்தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. ஈடு வைக்கப்பட்ட இயந்திர உபகரணங்கள் உரிய பிரகாரம் காப்புறுதி செய்யப்படாதிருந்ததுடன் 2011

யூலை மாதத்தின் போது வங்கி அதனை காப்புறுதி செய்ததன் பின்னர் வாடிக்கையாளரிடமிருந்து அறவிட்டிருந்தது. கம்பனி சில கொடுப்பனவுகளைச் செய்திருந்த போதிலும் அவைகளை அங்கீகரித்து தீர்த்து வைத்தல் திட்டத்தின் பிரகாரம் இல்லாதிருந்ததுடன் வங்கி அவ்வசதிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனியுடன் கலந்துரையாடவில்லை.

இச் செயற்திட்டத்தை மதிப்பீடு செய்யும் போது குறைபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் கம்பனிக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் இது வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தேயிலை ஏற்றுமதிக் கம்பனி**

இக்கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன் வசதித் தொகுதிக்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் செலுத்தாதிருந்ததன் பின்னர் 2008 ஆம் ஆண்டின் போது இந்த வசதிகள் ரூபா 96.081 மில்லியனுக்காக மீண்டும் பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் வாடிக்கையாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் ரூபா 45 தொகையான மேலதிக கடன் வசதிகளையும் வங்கி வழங்கியிருந்தது. அந்த மீள் பட்டியலிடப்பட்ட வசதிகளுக்காகவும் முறையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

ரூபா 7.5 மில்லியன் தொகைக்காக மீள்பட்டியலிடப்பட்ட தவணைக்கடன் ஏ2 இற்காக ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களுக்காக வங்கி பராட்டே உரித்தை அமுல்படுத்தியிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஏல விற்பனையின் போது சொத்துக்கள் வங்கிக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் எஞ்சிய கடன் வசதிகளை அறவிடுவதற்காக வங்கி அறவிடும் செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்தக் கடன் வெளிப்படுத்துகை ரூபா 99.4 மில்லியனாக இருந்தது.

வியாபாரங்களை நடாத்துவதற்காக மேலும் கடன் வசதிகளை வழங்குவதை வங்கி நிராகரித்த காரணத்தினால் ஏற்பட்ட வியாபார நட்டங்களுக்காக ரூபா 15 மில்லியன் கோரப்பட்டு கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளரினால் வங்கிக்கு எதிராக வணிக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

**(ஈ) உலோகப் பொருள் வியாபாரமும் தோட்ட வழங்கல் கம்பனியும்**

மேற்கூறப்பட்ட கம்பனிக்கு ரூபா 133,148,219 கூட்டுத்தொகையான கடன் வசதிகள் நுவரெலிய மேற்தரக் கிளையினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்கடன் 2009 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்ற கடன் முற்பணமாக காணப்பட்டது.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் 2010 திசெம்பர் மாதத்தின் போது வங்கி ஏலத்தில் விற்பதற்கு பகிரங்கப்படுத்தியிருந்த போதிலும் கடன்பெற்றவரின் வேண்டுகோளின் பிரகாரம் 2011 யூன் வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடிக்கையாளர் ரூபா 1,015,000 தொகையினை வைப்புச் செய்ததன் காரணமாக 22 ஆம் பிரிவின் கீழ் பகிரங்கப்படுத்தலுக்கான அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் 2011 ஆகஸ்ட் முதல் ஒரு வருடத்திற்காக மாதாந்தம் ரூபா 500,000 வைப்புச் செய்வதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் இறுதி நலனாக அட்டுறு வட்டியின் 50 சதவீதம் ஐ கைவிடுவதற்கும் வங்கி இணங்கியிருந்தது.

எவ்வாறாயினும் ரூபா 3.5 மில்லியன் தொகையான வைப்பினால் மீள்பட்டியலிடப்பட்ட "பீ" வசதிகள் முழுமையாக அறவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் ஏனைய கடன் பணத்திலிருந்து ரூபா 487,344 தொகையும் அறவிடப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஏனைய கடன் வசதிகளிலிருந்து கிடைக்க வேண்டிய மொத்த மூலதன நிலுவைத் தொகை ரூபா 133,058,953 ஆக இருந்தது. வசதிகளை மீள பட்டியல்படுத்துவதற்கான கலந்துரையாடல் செயல்முன்னேற்றத்தில் காணப்பட்டது.

**(உ) கப்பல் போக்குவரத்தும் தொடர்புடைய சேவைகளை வழங்கும் கம்பனியும்**

வெளிநாட்டு நிதி வங்கிப் பிரிவினால் (எப்சீபீயூ) இக்கம்பனிக்காக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் கடனை முடிவுறுத்துதலின் நலனாக யூ.எஸ்.டொலர் 65,000 வட்டிச் சலுகையுடன் யூ.எஸ்.டொலர் 814,062 தொகைக்காக 2005 ஆம் ஆண்டின் போது அது மீள்பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இக்கம்பனிக்கு கடன் வதசிகளை முழுமையாகத் தீர்ப்பதற்காக ரூபா 1.08 மில்லியன் தொகை மேலதிகப் பற்று வசதிகளின் அடிப்படையில் 50 சதவீத வட்டியைக் கைவிடுவதற்கும் ஒவ்வொரு

சகோதர கம்பனிக்காக ரூபா 14.8 மில்லியன் தொகையான அதாவது 70 சதவீத வட்டியைக் கைவிடுவதற்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

தற்போது கம்பனி தொடர்ந்தும் காணப்படாமையினால் வெளிநாட்டு, உள்நாட்டுச் செயற்பாடுகளை நிறுத்தியிருந்ததுடன் மேலும் புதிய பதிவேடுகளுடன் உபபட்டியலிடப்படுவதற்கு முடியாதிருந்தது. அதனால் 2012 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு அட்டுறு வட்டியில் (யூ.எஸ்.டொலர் 122,215) 40 சதவீதத்தை கைவிடுவதுடன் 2012 பெப்ரவரி 01 தொடக்கம் இறுதிக் கொடுப்பனவுத் திகதி வரைக்கும் அட்டுறு வட்டியுடன் சகல செலுதத் வேண்டியவைகளும் மீளச் செலுத்தவேண்டியதாகப் பேணப்பட்ட இறுதி இலாபமாக யூ.எஸ்.டொலர் 65,000 உடன் வசதிகள் 120 மாதங்களில் செலுத்தி முடிவுறுத்துவதற்கு நிதிப் பணிப்பாளரின் மீளச் செலுத்தும் திட்டம் 2012 பெப்ரவரி 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனி 2012 செப்தெம்பர் வரை மாதாந்தம் யூ.எஸ்.டொலர் 8,133.02 தொகை செலுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் அதற்கு இணங்கியிருக்கவில்லை. மேலும் வங்கி இணைந்த நலனைப் பெறுவதற்காக சட்ட திணைக்களத்திற்கு விண்ணப்பித்திருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த மூலதன நிலுவை யூ.எஸ்.டொலர் 792,640 ஆகும்.

**(ஊ) ஆடை உற்பத்திக் கம்பனி**

**---------------------------------------------**

கம்பனி முதலீட்டுச் சபைக்குக் சொந்தமான கம்பனியாக இருந்ததுடன் வங்கியினால் பிரித்தானிய பவுன் (GBP) 1,500,000 தொகை மற்றும் யூ.எஸ்.டொலர் 350,000 தொகையான வழங்கல்களைக் கையேற்று கடன் வசதித் தொகுதியொன்று வெளிநாட்டு நிதி வங்கி அலகினால் (எப்சீபீயூ) 2006 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் வசதிகளைப் புறக்கணித்த ஏனைய கம்பனியொன்று இக்கம்பனியினால் கைப்பற்றப்பட்டு அவ்வாறு புறக்கணித்துக் சென்ற கம்பனியின் செயற்பாடற்ற கடனைத் தீர்ப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் அக்கம்பனியினால் தமக்குரிய வசதிகளையும் புறக்கணித்திருந்தது.

இதற்கிடையே தனியார் வங்கியிடமிருந்து பெற்ற வசதிகளும் கம்பனியினால் புறக்கணிக்கப்பட்டமையால் சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால் அதன் சகல செயற்பாடுகளும் முடிவுறுத்தப்பட்டு தனியார் வங்கியால் அதிலுள்ள சகல சொத்துக்களும் கையேற்கப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டின் கலந்துரையாடலின் படி தற்காலிக மேலதிகப்பற்று மற்றும் அட்டுறு வட்டியில் 75 சதவீதம் (யூஎஸ்டொலர் 25,524) இனைக் கைவிடுவதுடன் ஈடு வைத்தல் வசதியில் மூலதன நிலுவையில் ஒரு பகுதி மற்றும் அதன் பின்னர் 2011 ஒக்தோபர் 24 தொடக்கம் அட்டுறுவாகும் வட்டியுடன் நிலுவை மூலதனத் தொகையிலிருந்து வங்கி அறவிடப்பட்டிருந்த யூஎஸ்டொலர் 150,000 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும் சட்டரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக பதிவேடுகளை சட்டத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

கைப்பற்றப்பட்ட கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய சகலதும் தீர்க்கப்பட்டு கடன்களின் தவணைப் பெறுவனவுகள் மற்றும் தற்காலிக மேலதிகப் பற்றுக்களின் மொத்த மூலதன நிலுவை 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முறையே GBP 1,387,955, யூஎஸ்டொலர் 170,000 மற்றும் ரூபா 12,478 ஆக இருந்தன.

**(எ) கல்விச் சேவைகளை வழங்கும் கம்பனி**

2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 294 மில்லியன் தொகையான மூன்று தவணைக் கடன்கள் இக்கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் முறையாகச் செலுத்தப்படாமையினால் 2007 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்டது. கடன் வசதிகளை மீளப் பட்டியல்படுத்துவதற்காக வாடிக்கையாளருடன் நடைபெற்ற கலந்துரையாடல் வெற்றியளிக்காதிருந்ததுடன் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களுக்காக பராடே (Parate) உரித்தை அமுல்படுத்துவதற்கு வங்கி பல தடவை எடுத்த முயற்சியினால் சில கொடுப்பனவுகளைச் செய்ததன் பின்னர் வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் கைவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் கவனத்திற்கொள்ளக்கூடிய காலப்பகுதியொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மீளச் செலுத்தும் திட்டமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்தக் கடன் வெளிப்படுத்தல் ரூபா 274.3 மில்லியனாக இருந்தது. எனினும் 2012 ஆம் ஆண்டின் போது மீளச் செலுத்தலாக வாடிக்கையாளர்கள் ரூபா 19.8 மில்லியன் தொகையைச் செலுத்தியிருந்தனர்.

## 2.4 செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பீஏ) மற்றும் நட்டக் கடன்களிற்கான ஏற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளுக்குமான செயற்பாடற்ற முற்பணங்கள் தொடர்பான தகவல்களை பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது.

| ஆண்டு | பட்டியல்கள், கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்தம் | என்பீஏ | மொத்த பட்டியல்கள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக என்பீஏ | நட்டக்கடன்களிற்கான ஏற்பாடு | மொத்த என்பீஏயின் சதவீதமாக நட்டக்கடன்களின் ஏற்பாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில் | ரூபா. மில் | % | ரூபா. மில் | % |
| 2009 | 275,061 | 15,542 | 5.60 | 9,956 | 64 |
| 2010 | 382,310 | 12,639 | 3.31 | 9,588 | 76 |
| 2011 | 552,792 | 11,416 | 2.07 | 9,140 | 80 |

(ஆ) (i) மீளாய்வாண்டின் போது பின்வரும் கிளைகளிலும் செயற்பாடற்ற முற்பணங்கள் உயர் சதவீதத்தினை பிரதிபலித்தது.

| கிளைக் குறியீடு | கிளையின் பெயர் | முற்பணங்களின் மொத்தம் | மொத்த என்பீஏ | மொத்த முற்பணத்தின் சதவீதமாக என்பீஏ |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில் | ரூபா. மில் | % |
| 7 | பாணந்துறை | 1,996 | 275 | 13.8 |
| 49 | நுகேகொடை | 2,737 | 216 | 7.9 |
| 618 | மெட்ரோபொலிட்டன் | 5,469 | 394 | 7.2 |
| 122 | கலன்பிந்துனுவெவ | 545 | 36 | 6.5 |

(ii) பத்து வாடிக்கையாளர்களுக்குரிய செயற்பாடற்ற முற்பணங்கள் ரூபா 1,557,318,298 கூட்டுத்தொகையான கூடிய பெறுமதியொன்றைப் பிரதிபலித்தது.

(இ) பத்து வாடிக்கையாளர்கள் தொடர்பாக நிலுவைக் கடன்களிற்கான முதலும் வட்டியும் என பதிவழிக்கப்பட்டிருந்த பெறுமதிகள் முறையே ரூபா 9,688,763 மற்றும் ரூபா 31,494,089 ஆகும்.

## 2.5 தடுத்து உடைமையாக்கப்பட்ட ஆதனங்கள்

முற்பணங்களுக்குப் பிணையாக வங்கியில் ஈடுவைக்கப்பட்டிருந்த அதிக எண்ணிக்கையிலான ஆதனங்கள் நிலுவை மீதிகளை அறவிடும் நோக்கில் மீளாய்வாண்டின் போது ஏலமிடப்பட்டிருந்தன. 2011 திசெம்பர் 31 வரையிலும் விற்பனை செய்வதற்கு முடியாதிருந்த ரூபா 899 மில்லியன் பெறுமதியான தடுத்து உடமையாக்கப்பட்ட 110 ஆதனங்கள் காணப்பட்டன. அந்த ஆதனங்களின் விபரம் கீழே தரப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| **உள்நாடு** | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு (குறிப்பு 01) விற்பனை செய்யப்படாத ஆதனங்கள் | 440,778,551 |
| **வெளிநாடு** | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு (குறிப்பு 02) விற்பனை செய்யப்படாத ஆதனங்கள் | 457,978,267 |

**2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்பனை செய்யப்படாத மொத்த ஆதனங்கள் 898,756,818**

**குறிப்பு 01**

| **விபரங்கள்** | **ஆதனங்களின் எண்ணிக்கை** | **பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா** |
| இறுதியாக்கலுக்கு காத்திருக்கும் ஆதனங்கள் | 15 | 128,882,881 |
| சிக்கல்கள் உள்ள ஆதனங்கள் (நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஏனைய விடயங்களில் காத்திருத்தல்) | 73 | 232,664,510 |
| விற்பனை விளம்பரப்படுத்தலுக்காக பட்டியலப்படுத்தப்பட்ட ஆவணங்கள் | 17 | 70,930,758 |
| முழுமையான ஆவணத் தொகுதி கிடைத்திருக்காத ஆதனங்கள் | 2 | 8,300,402 |
| **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி** | **107** | **440,778,551** |

**குறிப்பு 02**

| | **ஆதனங்களின் எண்ணிக்கை** | **பெறுமதி** |
|---|---|---|
| | | **யூ.எஸ்.டொலர்** |
| மொத்தப் பெறுமதி | 3 | 4,020,527 |
| **பெறுமதி யூ.எஸ்.டொலர் 4,020,527.32@ ரூபா 113.905** | | **ரூபா 457,958,164** |

சிக்கலானவையான 73 ஆதனங்களில் 54 ஆதனங்கள் (நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஏனைய விடயங்களிற்குக் காத்துள்ள) ஐந்து ஆண்டு காலத்திற்கு மேற்பட்டவையாகும்.

## 2.6 சீபேங்க் அட்டை நிலையம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அட்டை நிலையத்தினால் 2011 திசெம்பர் 31 வரையில் 113,717 அட்டைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறான மொத்த நிலுவை மீதி ரூபா 1,954,662,380 ஆகும். இதில் ரூபா 74,047,340 அல்லது 3.8 சதவீதம் செயற்பாடற்ற வகைக்குரியதாக இருந்தது. செயற்பாடற்ற முற்பணங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| வகை | ரூபா |
|---|---|
| காலம் கடந்தவை | 5,067,135 |
| குறைத் தன்மையிலுள்ளவை | 8,046,490 |
| சந்தேகத்திற்குரியவை | 5,136,282 |
| நட்டம் | 55,797,433 |
| மொத்தம் | 74,047,340 |

(ஆ) அட்டைகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2011 திசெம்பர் 31 வரை ஒரு தவணைக் கட்டணத்தையேனும் செலுத்தப்பட்டிராத அட்டை உரிமையாளர்களின் எண்ணிக்கை 59 ஆக இருந்ததுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 3,419,230 ஆக இருந்தது.

(இ) 2007 - 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் அட்டை நிலையத்தினால் பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் வட்டிகள் தொடர்பாக 1,766 வசதிகள் முறையே ரூபா 57,841,951 மற்றும் ரூபா 45,932,433 ஆக இருந்தன.

## 2.7 வங்கிக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள்

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொதுவான வங்கிச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுந்த பிணக்குகளின் காரணமாக வங்கிக்கு எதிராக நட்ட ஈடாக ரூபா 753 மில்லியன் (அண்ணளவாக) கோரப்பட்டு 135 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 2.8 குத்தகைக்கு விடல்

குத்தகை வியாபாரம் தொடர்பில் கீழே காண்பிக்கப்பட்ட கிளைகள் ஆகக் கூடிய செயற்பாடற்ற முற்பண விகிதத்தை பதிவுசெய்திருந்தன.

| கிளையின் பெயர் | என்பீஏ தொகை | என்பீஏ விகிதம் % |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| இரத்மலானை | 23,368,823 | 74.64 |
| வலஸ்முல்ல | 8,799,287 | 62.94 |
| கேகாலை | 4,682,448 | 58.35 |
| கரமெட்டிய ஏஸ்சீ | 2,062,164 | 39.94 |
| அகுநாகொலபெலெஸ்ஸ | 3,324,828 | 39.05 |
| தெஹிவளை | 6,254,677 | 38.74 |
| தங்காலை | 8,867,248 | 37.39 |
| 5ஆவது நகரக்கிளை | 5,436,222 | 33.10 |
| கொலன்னாவை | 12,201,963 | 25.26 |
| வீரகெட்டிய | 18,992,470 | 24.76 |

## 2.9 அடகுவைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 6 கிளைகளில் ரூபா 7.383 மில்லியன் பெறுமதியான போலியான அடகுப் பொருட்கள் மற்றும் அனுமதியற்ற அடகுப் பொருட்கள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டன.

(ஆ) தொங்கல் கடன்கொடுத்தோர் கணக்கிலுள்ள 06 மாதங்களுக்கு மேற்பட்ட மேலதிக பணம் உரிமைகோரப்படாத மீதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்க வில்லை.

**2.10 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) குத்தகை சொத்துக்கள்**

(i) நீடிப்பு காரியாலயங்களை உள்ளடக்கிய 400 கிளைகள் குத்தகைக் கட்டிடங்களில் இயங்கியிருந்தன. இக்காரியாலயங்களுக்குரிய 23 குத்தகை உடன்படிக்கைகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காலம் கடந்திருந்ததுடன் அவைகள் 2012 மே மாத இறுதிவரையிலும் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருந்தும் குத்தகை உடன்படிக்கைகள் புதுப்பிக்காது வங்கியினால் தொடந்தும் அந்த கட்டிடங்களில் அதன் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) வங்கியானது தீ மற்றும் கொள்ளை ஆபத்துக்களுக்காக காப்புறுதிப் பூட்கை பெற்றுக்கொள்ளாது 197 குத்தகைக் கட்டிடங்களில் அதன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வரி விதிப்புக்கள்**

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறுமதிசேர் வரியில் கழிக்கப்படக்கூடிய 14 கிளைகளின் வரிக் கணக்குகள் தொடர்பாக ரூபா 1,675,359 தொகையான உள்ளீர்க்கப்பட்ட வரிக்குரிய உரித்துக்கான கிளையினது பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள் தலைமைக் காாரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்படாமையினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கோரிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.11 முதலீடுகள்**

**(i) துணைக்கம்பனிகளில் முதலீடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சீபேங்க் ஹொலிடே ஹோம்ஸ் (பிரைவெட்) லிமிடெட்**

இக் கம்பனியின் உரிமைத் தன்மை முழுவதும் வங்கிக்குச் சொந்தமானதுடன் மீளாய்வாண்டில் விசேடமாக ஊழியர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு யாத்திரிகர்களுக்கு ஓய்வு விடுதிகள்/ விடுமுறை விடுதிகள்/ விருந்தினர் விடுதிகளை நடாத்துவதே கம்பனியின் பிரதான செயற்பாடாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் மொத்த பதவியினர் எண்ணிக்கை 135 ஆக இருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முகாமைத்துவக் கட்டணமாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்காக வங்கியினால் முறையே ரூபா 7.748 மில்லியன் மற்றும் ரூபா 7.457 மில்லியன் தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது கண்டி மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விடுமுறை விடுதி என்பன முறையே ரூபா 0.341 மில்லியன் மற்றும் ரூபா 0.037 மில்லியன் நட்டத்துடன் நடாத்தப்பட்டிருந்தன.

**(ஆ) மேர்சன்ட் பேங்க் ஒப் சிறிலங்கா பீஎல்சீ**

மீளாய்வாண்டின் கம்பனியின் பிரதான செயற்பாடாக குத்தகை மற்றும் குத்தகைக் கொள்வனவு, வியாபார நிதி, ஒன்றிணைந்த ஆலோசனைச் சேவை, நிதிய முகாமைத்துவம், மூலதனச் சந்தை நடவடிக்கைகள், ஒன்றிணைந்த செயலகச் சேவைகள் மற்றும் சட்டச் சேவைகளாக இருந்தன. கம்பனியில் 72.14 சதவீதம் ஆன மூலதனம் வங்கிக்குச் சொந்தமாகக் காணப்பட்டது. கம்பனியின் ஒட்டுமொத்த பதவியணியினர் 202 ஆக இருந்தனர்.

மேர்சன்ட் பேங்க் ஒப் சீறீலங்கா சேமிப்பு வங்கி மேர்சன்ட் பேங்கஒப் சிறிலங்கா பீஎல்சீ கம்பனியின் துணைக்கம்பனியாக இருந்ததுடன் அதன் பிரகாரம் அவை இலங்கை வங்கியின் மறைமுக துணைக்கம்பனியாக அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. மேலும் எம்பீஎஸ்எல் துணைக்கம்பனியின் வங்கி அனுமதிப்பத்திரங்கள் விசேட வங்கியாக இருந்ததுடன் இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ) வழங்கப்படுகின்ற கட்டளைகளுக்கு அது இணங்க வேண்டியிருந்தது.

எனினும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டாயத் தேவைப்பாடுகளை எம்பீஎஸ்எல் சேவைகள் வங்கியினால் பேணப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) அனுமதிப்பத்திர தாரர்களின் விசேட வங்கிக்காக சகல சந்தர்ப்பங்களின் போதும் சாட்டப்பட்ட சொத்துக்களின் முழுக்கவனம் தொடர்பாக 10 சதவீதத்திற்குக் குறையாத மூலதன விகிதத்தையும் பேணுதல் மத்திய வங்கியின் தேவைப்பாடாகும். 2011 ஆம் ஆண்டில் முதல் மூன்று காலாண்டிலும் இந்த விகிதத்தைப் பேணுவதற்கு வங்கியினால் முடியுமாக இருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த நான்காம் காலாண்டிற்காக இந்த விகிதம் 7.76 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ii) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரதாரர்கள் வங்கியினால் அதன் மாதாந்த மொத்த வைப்புப் பொறுப்பில் 20 சதவீத ஆகக் குறைந்த மாதாந்த சராசரியான திரவத் சொத்து விகிதத்தைப் பேண வேண்டும். எனினும் 2011 ஆம் ஆண்டின் போது வங்கியின் திரவச் சொத்து விகிதம் அதன் மாதாந்த மொத்த வைப்புப் பொறுப்பில் 16 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

**(இ) வரையறுக்கப்பட்ட எம்பீஎஸ்எல் காப்புறுதிக் கம்பனி**

கம்பனியின் பிரதான செயற்பாடாக சகல வருடங்களிலும் பொதுக்காப்புறுதி மற்றும் ஆயுட்காப்புறுதிகளைச் செய்வதாகும். எம்பீஎஸ்எல் காப்புறுதிக் கம்பனியில் வங்கியின் உரித்து 56.28 சதவீதம் ஆக இருந்ததுடன் மேர்சன்ட் பேங்க் ஒப் சிறிலங்கா பீஎஸ்சீ கம்பனியின் துணைக் கம்பனியாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது ரூபா 3.905 மில்லியன் தொகை வரியின் பின்னரான இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனிக்கு முடியுமாக இருந்தது.

(ii) இந்த இலாபம் கம்பனியின் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 390.002 மில்லியனான (அறிவித்தலின் பின்னர்) திரண்ட நட்டமானது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 386.097 மில்லியன் வரை குறைவடைவதற்கு காரணமானதுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொதுக் காப்புறுதித் திட்டத்திலும் காப்புறுதிச் செயற்திட்டத்திலும் இயலளவு விகிதம் முறையே 1.56 சதவீதம் மற்றும் 5.04 சதவீதம் ஆக இருந்தது.

**(ஈ) வரையறுத்த பீஓசீ ட்ரவல்ஸ் (தனியார்) கம்பனி**

இக்கம்பனியின் உரிமைத்தன்மை முழுமையாக வங்கிக்குச் சொந்தமாக இருப்பதுடன் அதன் பிரதான செயற்பாடாக தவணை தொடர்பான சேவைகளில் ஈடுபடுதலாகும். 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 137.318 மில்லியனாக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ள்பபட்டன.

(i) கம்பனியின் கணக்காய்வாளரினால் கம்பனியின் ஊழியர்களின் நலன்களைக் கணிப்பீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தாததன் மூலம் முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிரயமின்றி கம்பனியின் செயற்பாடு தன்மை தொடர்பாக உள்ளவாறானதும் பொதுவானதுமான நிலைமை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 (2006 இல் திருத்தம் செய்யப்பட்ட) இன் பிரகாரம் பின் சேவையில் ஈடுபடும் நலன்களைப் பகிரும், பொருத்தமான ஆயுட்கால எண்ணிக்கை முறைமை, பணிக்கொடை வாய்ப்பாட்டு முறைமையை ஈடுபடுத்துவதன் மூலம் கணிப்பீடு செய்ய வேண்டும். எனினும் கம்பனி 1983 இன் 12 ஆம் இலக்க பணிக் கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் கீழ் ½ மாத சம்பளம் சேவைக்காலத்தில் வருட எண்ணிக்கையில் சீராக்கியதன் பின்னர் சேவையிலுள்ளவர்களின் நலன் பகிர்ந்தளிப்பு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இது ஒன்றிணைந்த கணக்கீட்டு கொள்கைகளுடன் ஒன்றிணையாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(உ) பீஓசி புரபர்ட்டி டிவெலொப்மென்ட் அன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவெட்) லிமிடெட்**

வங்கியின் முழுமையான சொந்தமான உதவிக் கம்பனியாக இருந்ததுடன் இதன் அடிப்படைச் செயற்பொறுப்பாக கம்பனிக்குச் சொந்தமான கொழும்பு 03 இல் அமைந்துள்ள பீஓசீ மர்ச்சன்ட் கட்டிடம் மற்றும் கண்டியில் அமைந்துள்ள சீபேங்க் ஹவுஸ் போன்ற இரண்டு கட்டிடங்களையும் அலுவலக செயற்பாடுகளுக்காக வாடகைக்கு வழங்குவதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது கம்பனி ரூபா 90.526 மில்லியன் இலாபத்தை உழைத்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் இது ரூபா 32.633 மில்லியனாக இருந்தது.

(ii) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 6.240 மில்லியன் ஆக இருந்தது.

**(ஊ) பீஓசி மெனேஜ்மன்ட் அன்ட் சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவெட்) லிமிடெட்**

இந்தக் கம்பனியின் பிரதான செயற்பொறுப்பாக வங்கியின் மனித வலுத் தேவைகளை ஈடுசெய்வதற்கான பங்களிப்பினைச் செய்வதுடன் அதற்கான தரகினை வங்கியிலிருந்து அறவிடுவதுமாகும். இக் கம்பனி முழுமையாக வங்கிக்குச் சொந்தமான துணைக்கம்பனியாக இருந்தது.

மீளாய்வாண்டின் போது கம்பனி அதன் பிரதான நோக்கங்களை நிறைவேற்றாதிருந்ததுடன் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து மாத்திரமே வருமானத்தைப் பெற்றிருந்தது.

**(ii) வர்த்தக ரீதியற்ற பங்குகளில் முதலீடுகள்**

கீழே குறிப்பிடப்படும் வர்த்தகரீதியற்ற பங்குகளில் 2010 ஆம் ஆண்டிற்காக பங்கு இலாபங்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

| கம்பனி | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டின் பெறுமானம் |
|---|---|---|
| | | ரூபா |
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் | 12,115,571 | 3,250,450,000 |
| கண்டி டெக்ஸ்டைல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் | 191,790 | 1,918,000 |
| மெக்பெக் எக்ஸ்போட் லிமிடெட் | 300,000 | 4,355,000 |
| செரண்டிப் கொகனட் புரடக்ஸ் லிமிடெட் | 37,500 | 375,000 |

**(iii) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனியில் முதலீடு**

வங்கி 2009 ஆம் ஆண்டின் போது எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் கம்பனிக்குரிய ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பங்குகளில் 43.63 சதவீதத்தைக் கொள்வனவு செய்திருந்தது. சாதாரண காலப்பகுதியில் மீளக் கையளிப்பதின் கீழ் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக நிதிச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

2010 மார்ச் 31 ஆந் திகதியிலுள்ளவாறும் 2011 மார்ச் 31 ஆந் திகதியிலுள்ளவாறும் கம்பனியின் திரண்ட நட்டம் முறையே ரூபா 2,716 மில்லியன் மற்றும் ரூபா 3,098 மில்லியனாக இருந்தது. முதலீடு செய்யப்பட்ட திகதி தொடக்கம் வங்கி எந்த வருமானத்தையும் உழைத்திருக்கவில்லை.

புதிய மதிப்பீட்டின் பின்னர் வரையறுத்த ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் பங்குகளில் ரூபா 3.25 பில்லியனை முதலீடு செய்வதற்காக வங்கி ரூபா 1.788 பில்லியன் தொகையை 2012 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்ததாக வங்கியின் தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்துக் காலம் வங்கியின் தலைவருக்கு வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கைகள் மூலம் வங்கியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் நிருவாகம்

(ஆ) மனிதவள முகாமைத்துவம்

(இ) கிளை நடவடிக்கைகள்

(ஈ) பொருட் பதிவேடுகள்

(உ) வைப்புக்கள்

(ஊ) வாடிக்கையாளர் சேவைகள்

(எ) கணக்கீடு

(ஏ) காப்புறுதி

(ஐ) கொள்வனவுகள்

(ஒ) வரியிடல்கள்

(ஓ) முதலீடுகள்

(ஔ) வழக்குத் தொடர்தல்

(க) பதிவேடுகளைப் பேணுதல்

(கா) தற்காலிக வங்கி மேலதிகப் பற்றுக்கான அங்கீகாரம்